# சமூக நல்லிணக்கம்: மெத்தனம் கூடாது

**வீ. பழனிச்சாமி**

சமூக உறவுகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து அதை பல்லாண்டுகளாகக் கடைப்பிடித்து வருகிறோம்.

அரசாங்கம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் சமூக ஈடுபாட்டுத் திட்டத்தை தொடங்கியபோது, அது நமக்குப் புதியதாகத் தோன்றவில்லை.

அந்த வகையில் நாம் கட்டிக்காத்து வரும் சமூக ஒற்றுமை தொடர்ந்து நம்மிடையே தானாக நீடிக்கும் என்ற மெத்தனப்போக்கில் நாம் இருக்கக்கூடாது என்று துணைப் பிரதமரும் உள்துறை அமைச்சருமான வோங் கான் செங் நேற்று கூறினார்.

தேசிய சமூக ஈடுபாட்டுத் திட்டம் தொடர்பான கருத்தரங்கில் நேற்றுப் பேசிய திரு வோங், சமூக நிலவரம் எப்போதும் வலுப்பெற்று மாறிக்கொண்டே இருக்கும். உள்ளூரிலேயே தீவிரவாதப்போக்கு துளிர்விட்டிருப்பதை நாம் அண்மைய ஆண்டுகளாகக் கண்டு வருகிறோம் என்றார்.

ஆக, நமது சமூகத்தில் எக்காரணத்தைக் கொண்டும் தீவிரவாதம் தலையெடுக்க நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்திய துணைப் பிரதமர் வோங், சமூக ஈடுபாட்டுத் திட்டம் பற்றிய விழிப்புணர்வும் புரிந்துணர்வும் தொடரவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அப்படி இல்லை என்றால் சமூக நல்லிணக்க விழிப்புணர்வு மங்கிவிடும். பிறகு, இடர்காலத்தின்போது, அது எதிர்பார்க்கப்படும் சமூக ஒற்றுமையை வெளிப்படுத்தாது என்றும் திரு வோங் எச்சரித்தார்.

அண்மைய மாஸ் செலாமட் விவகாரத்தில் கிளம்பிய எதிர்ப்பு உணர்வுகளைச் சமூக அமைப்புகள் எவ்வாறு புரிந்துணர்வுடன் கையாண்டன என்பதை நாம் கண்கூடாகப் பார்த்தோம்.

பயங்கரவாதத்துக்கு எதிரான நமது முயற்சிகளுக்கு இச்சம்பவம் ஒரு கறுப்புப் புள்ளி என்றாலும், சமூக அமைப்புகள் தெரிவித்திருக்கும் ஆதரவு திருப்தியும் ஊக்கமும் அளிக்கின்றன என்றார் துணைப் பிரதமர்.

தேசிய சமூக ஈடுபாட்டுத் திட்டம் தொடர்பான கருத்து அரங்கில் நேற்று அமைச்சர்கள் பலர் பங்கேற்றனர்.

அமைச்சர்கள் விவியன் பாலகிருஷ்ணன், கே. சண்முகம், கான் கிம் யோங், மூத்த துணை அமைச்சர்கள் ஹோ பெங் கீ, பாலாஜி சதாசிவன், மேயர்கள் டியோ ஹோ பின், ஜைனுதின் நூர்தின், ஏமி கோர், மூத்த நாடாளுமன்றச் செயலாளர் மசகோஸ் ஜுல்கிஃப்லி ஆகியோருடன் சுமார் 400 பேர் கலந்து கொண்டனர்.




தேசிய சமூக ஈடுபாட்டுத் திட்டத்தின் கண்காட்சியைத் துணைப் பிரதமர் வோங் கான் செங் பார்வையிடுகிறார்.
(ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ்)

'சமூக ஈடுபாட்டுத் திட்டம் சமய நல்லிணக்கத்தையும் மேம்படுத்தி உள்ளது. கடந்த ஆண்டு மே மாதத்தில் இந்து அறக்கட்டளை வாரியம், லிஷா, ஜமியா சிங்கப்பூர் ஆகியவை சிங்கப்பூர் புத்திஸ்ட் லாட்ஜ் ஏற்பாடு செய்த விசாகத் தின மெழுகு தீப ஊர்வலத்தில் பங்கேற்றன. இவ்வாண்டு ஜனவரியில் தைப்பூசத் திருவிழாவில் சிங்கப்பூர் புத்திஸ்ட் லாட்ஜ் தொண்டர்கள் சாலை வழிகாட்டி அதிகாரிகளாகச் செயல்பட்டனர். இப்படிப்பட்ட நடவடிக்கைகள் வரவேற்கப் படுகின்றன.' - **திரு வோங் கான் செங்,** துணைப் பிரதமர், உள்துறை அமைச்சர், சமூக ஈடுபாடு தொடர்பான அமைச்சர்நிலை குழுவின் தலைவர்.

'இந்து கலைகள் பற்றி இதர இனத்தவருக்குப் புரியவைத்தல், அவர்களின் கலைகளை நாம் புரிந்துகொள்ளுதல் போன்றவை சமூகப் புரிந்துணர்வை வலுப்படுத்தும். அதில் ஆத்ம திருப்தியும் ஏற்படுகிறது.'
- **திரு கே. பி. பாஸ்கர்,** நிறுவனர், பாஸ்கர் கலைப்பள்ளி

'அவசரகாலத்தின்போது தொண்டு நிறுவனங்கள், உதவி அமைப்புகள் ஆகியவற்றுடன் உதவி தேவைப்படுவோரை இணைத்து வைக்கும் ஒரு பாலமாக சிண்டா பணியாற்றும்.' - **திரு எஸ். மனோகரன்,** தலைமை நிர்வாக அதிகாரி, சிண்டா